# சுபீட்சம்


SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 21.02.2023 supeedsam.com supeedsam@gmail.com


# நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு!



நேற்று (20) நள்ளிரவுக்குப் பிறகு, எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி கிடைக்கப்பெறவுள்ளது. அரசியலமைப்பின் 70 (1) உட்பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அரசியலமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய நாடாளுமன்றம் முதல் முறையாக கூடுவதற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில், நாடாளுமன்றத் தீர்மானம்

02 ஆம் பக்கத்தில்...

## நாடாளுமன்றத்துக்குள் இன்று வேடிக்கப்போகும் போராட்டம்!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக் கோரியும், மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்துக்குள்ளே மாபெரும் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. மற்றும் சுதந்திர மக்கள் கூட்டணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்தில் இன்று குதிக்கவுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

## குள்ளநரித்தனத்தை அம்பலப்படுத்தியே தீருவோம்!



தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற கேள்விக்கு மத்தியில் நாங்கள் பரப்புரை செய்கின்றோம். தேர்தல் நடக்க வேண்டும். நடத்த வைப்போம். நாங்கள் தேர்தல் நடக்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் சொல்கின்றோம். தேர்தல் நடக்காமல் பிற்போடப்பட்டால் அந்தக் குள்ளநரித்தனத்தையும் வெளிக்கொண்டு வருவோம்.' - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## ராஜபக்சர்களின் குடும்பம் முழு நாட்டையும் சூறையாடியது



நாட்டின் மிகுதியாக இருக்கும் வளங்களை பாதுகாக்க வேண்டுமாயின் ராஜபக்சர்கள் கௌரவமாக அரசியலில் ஒதுங்கவேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

மதுகம நகரில் இடம்பெற்ற பிரச்சார நிகழ்வின் பின்னர் இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## 13 வது சீர்திருத்தத்தை ஒரு துளியளவு கூட ஏற்றுக்கொள்ள போவதில்லை



அண்ணாமலை ஈழத்திற்கு விஜயம் செய்த பின்னர் நாடு திரும்பி, ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்கு 13வது சீர்திருத்தம் தான் தீர்வு என்றும், இங்குள்ள மக்கள் அதைத்தான் வலியுறுத்தியுள்ளார்கள் என கருத்துருவாக்கத்தை செய்யும் கோணத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவருடைய இந்த கருத்தை நாங்கள் நிராகரிப்பது மட்டுமல்லாது அதனை வன்மையாக கண்டிக்கிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## நெடுமாறன் ஐயா அவர்களை நம்புகின்றோம்

பழ.நெடுமாறன் கூறிய கருத்தினை தாம் மறுப்பதிற்கில்லையென முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரான சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இன்று யாழில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை பௌத்த நாடு!; 13 ஐ முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரம் இது!; அண்ணாமலைக்கு வீரசேகர எச்சரிக்கை



'வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும், அது தமிழர் தாயகம் என்பதை மறைமுகமாக எடுத்தியம்பும் வகையிலேயே தமிழக பாரதிய ஜனதாத் கட்சித் தலைவர் கே.அண்ணாமலை கருத்து வெளியிட்டுள்ளார். இதற்கு எதிராக இலங்கை அரசு போர்க்கொடி தூக்கக்கூடாது என்பதற்காகவே வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலேயே உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். அண்ணாமலையின் இந்த விசமத்தனமான கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.' - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனாவின் நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...







# இந்தத் தேர்தலை வைத்து அதிகாரிகளும், அரசாங்கமும் இணைந்து ஒரு நாடகத்தினை நடத்திக் கொண்டிருக்கின்றனர்

**(சுமன்)**

தற்போதைய நிலையில் இந்தத் தேர்தலைப் பொருத்த மட்டில் அரச அதிகாரிகளும் அரசாங்கமும் இணைந்து ஒரு நாடகத்தினை நடத்திக் கொண்டிருப்பதாகவே நாங்கள் நாங்கள் நினைக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமழ ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ் ஊடக சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளான முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், வவுணதீவு பிரதேச சபை உபதவிசாளர் பொ.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு நடக்குமோ நடக்காதோ என்ற மனோநிலை இந்த நாட்டில் அனைவருக்கும் இருக்கின்றது. தேர்தல் என்பது அரசியலமைப்பின் பிரகாரம் காலத்திற்குக் காலம் நடைபெற வேண்டியது. ஒரு ஜனநாயக நாட்டிலே தேர்தல் ஒரு முக்கிய அங்கமாக இருக்கின்றது. மக்களினால் மக்களை ஆள வேண்டிய ஒரு நாட்டிலே தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. அந்த வகையில் எதிர்வரும் மார்ச் 09ம் திகதி நடக்கும் என்று அறிவிக்கப்பட்ட தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்று நூலிலே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது.

உண்மையிலேயே எந்தவித கள்ளம் கபடமும் அற்று தங்களுடைய அரசியல் வங்குரோத்துத் தனத்தை இந்தத் தேர்தலிலே காட்டாமல் இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு அரசாங்;கத்திற்கு இருக்கின்றது. தற்போதைய நிலையில் இந்தத் தேர்தலைப் பொருத்த மட்டில் அரச அதிகாரிகளும் அரசாங்கமும் இணைந்து ஒரு நாடகத்தினை நடத்திக் கொண்டிருப்பதாகவே நாங்கள் நினைக்கின்றோம்.

ஏனெனில் இந்த நாட்டின் பொருளாதார நிலைமை அரசுக்கும் அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். அந்த வகையில் கடந்த வரவுசெலவுத் திட்டத்திலே பத்து பில்லியன் தேர்தல் ஆணையகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் நாட்டின் பொருளாதார நிலையில் அந்தப் பணம் கிடைக்குமா கிடைக்காதா என்பது தேர்தல் ஆணையகத்திற்கும், அதன் தலைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் அரசுடன் ஒரு சுமூகமான நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவித்திருக்கின்றார்.



தேர்தலை அறிவித்த படி அந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஆணையிடுமாறு உச்ச நீதிமன்றத்திலே சில அரசியற் கட்சிகள், அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருந்தார்கள். தேர்தல் ஆணையகம் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது மீண்டுமொரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறியிருந்தது. அந்த வேளையில் தேர்தல் நடக்கும் என்ற ஒரு வெளிச்சம் எங்களுக்குத் தெரிந்தது. ஆனால் தற்போது நடந்துகொண்டிருக்கும் நிலைமைகளைப் பார்க்கும் போது இந்தத் தேர்தல் நடைபெறாது என்றே எங்களுக்குத் தோணுகின்றது.

ஏனெனில் தபால் வாக்கெடுப்பு காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. வாக்குச் சீட்டுக்களை அச்சடிக்கும் அரச அச்சகப் பிரதானி அச்சகத்திற்குரிய பணம் கொடுக்கப்படவில்லை என்று ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். தற்போது கூறுகின்றார் பாதுகாப்பு தரப்படின் அச்சடிக்கும் பணியை ஆரம்பிக்கலாம் என்று, ஆனால் பாதுகாப்பு வழங்கும் பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் அச்சடிக்கும் பணி தொடங்கினால் நாங்கள் பாதுகாப்புக் கொடுப்போம் என்று கூறியிருக்கின்றார். இது ஒரு வேடிக்கையான கருத்துகளாகவும், மக்களை ஏமாற்றும் நாடகமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

தேர்தல்கள் ஆணையாளர் கூறுகின்றார் தற்போதைய நிலையில் தேர்தலை தங்களால் நடத்த முடியாது என்று உச்ச நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்கான ஒரு நகல் பத்திரத்தை நகர்த்தி தனக்குள்ள இடையூறுகளையும், பணம் கிடைக்கமை தொடர்பிலும் உச்சநீதிமன்றத்திற்கூடாகச் சொல்வதற்கு இருக்கின்றார். இந்த அனைவருக்கும் தெரிந்த விடயத்தை ஒரு நாடகமாக்கி அரசியற் கட்சிகளையும், சுயேட்சைக் குழுக்களையும், அதனூடாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்லிலே போட்டியிடும் வேட்பாளர்களையும் ஏமாற்றும் வித்தையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்தத் தேர்தல் நடைபெறாது விட்டடல் வேட்பாளர்கள் அனைவரும் இதுவரை செலவழித்த பணம் வீண்விரயமாக்கப்படுகின்றது. அவர்கள் ஒவ்வொருவரும் செலவழித்த பணங்கள் இந்த நாட்டின் பணங்கள். தற்போதைய பொருளாதார நிலையில் இந்த தேர்தலை நடத்த முடியாது என்று ஆரம்பத்திலேயே ஒரு முடிவை எடுத்திருந்தால் வேட்பாளர்களாவது தங்களுடைய பணத்தை சேகரித்து வைத்திருப்பார்கள்.அதற்கும் மேலாக இன்று தற்போதைய பொருளாதார நிலையில் மக்கள் மிகவும் கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே அவர்களுக்குரிய தனிநபர் வருமானங்கள் எந்தவிதத்திலும் அதிகரிக்காமல் இருக்கின்றது. இவ்வாறிருக்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைககளை மேலும் அதிகரித்து இந்த அரசாங்கம் மேலும் மேலும் எமது மக்களை வதைக்கும் ஒரு செயற்பாட்டையே செய்கின்றது.

இன்று மின்சாரத்தின் விலைப் பட்டியல் அறுபத்தாறு வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேபோல் நீர்வழங்கல் திணைக்களமும் மின் கட்டணத்திற்கு ஏற்றால் போல் நீர் கட்டணத்தையும் அதிகரிப்பதாகத் தெரிவித்திருக்கின்றது.

எனவே இந்த நாட்டு மக்கள் ஏற்கனவே பொருளாதார நிலையில் மிகவும் நளிவடைந்து தனிநபர் வருமானங்கள் அதிரிக்காமல் இருக்கம் இந்த வேளையிலே அரசாங்கம் மேலும் மேலும் இந்த மக்கள் மீது இந்நிதிக் கஸ்டத்தை சுமத்துவது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என்று தெரிவித்தார்.

## விபுலானந்தாவின் வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு!






**(வேதசகா)**

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு நேற்று முன்தினம் விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது .

கல்லூரி அதிபர் மயில் வாகனம் சுந்தரராஜன் தலைமையிலும் கௌரவ தலைவர் முன்னாள் அதிபர் திருநாவுக்கரசு வித்யாராஜன் ஒருங்கிணைப்பிலும் இடம் பெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக மேனாள் கல்வித்துறை பேராசிரியர் கலாநிதி செல்லையா அருள்மொழி கலந்து சிறப்பித்தார்.

மேலும் பல சிறப்பு கௌரவ விசேட அதிதிகள் கலந்து சிறப்பித்தனர். வைரவிழா சிறப்பு மலர் காரைதீவின் மூத்த சேவையாளர்களான முன்னாள் தவிசாளர்கள் இ. விநாயகமூர்த்தி டாக்டர் எம். பரசுராமன் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. சமர்ப்பண உரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆலோசகர் உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த.

நூல் நயவுரையை ஆசிரியை திருமதி அ.சசிகுமார் நிகழ்த்தினார். மேடையில் இடையிடையே நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## குள்ளநரித்தனத்தை அம்பலப்படுத்தியே தீருவோம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதே சபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மக்கள் தேர்தல் நடக்குமா என்று கேட்கின்றார்கள். ஜனாதிபதிக்கு தேர்தலைச் சந்திக்கப் பயம். இதன் காரணத்தால் தேர்தலை பிற்போடப் பார்க்கின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தலையும் பெரும் சூழ்சியால் காலவரையறையின்றிப் பிற்போட்டுவிட்டார்கள். 2019 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக தனிநபர் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நான் சமர்ப்பித்தேன்.

இப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள்? மாகாண அதிகாரமும் கிடையாது. உள்ளூராட்சி அதிகாரங்களையும் பாவிக்கவிடாமல் பறித்து எடுத்துவிட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாமல் குறுக்கு வழியில் ஜனாதிபதியாக வந்த ஒருவர் முழு அதிகாரத்தையும் தன் கைக்குள் கொண்டுவரும் சூழ்ச்சிதான் தேர்தலைப் பிற்போட எடுக்கப்படும் நடவடிக்கை. இதற்கு எதிராக நாங்கள் திரண்டெழ வேண்டும்.

இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால்தான் தேர்தலைப் பிற்போட முனைகின்றார்கள். தேர்தல் வந்தால் ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் தூக்கி கடாசி விட்டார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரியவரும்' என்றார்.

## இலங்கை பௌத்த நாடு!: 13 ஐ முழுமையாக

உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மோடியில் கைகளில்தான் உள்ளன என்று இலங்கைக்கு வந்து சென்ற பின்னர் சென்னையில் வைத்து பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கே சரத் வீரசேகர மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'அண்ணாமலை கூறுவது போல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கனிந்துள்ளது. இலங்கையில் 13 க்கு எதிராக பிக்குகள் கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா? இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்துவிட்டாரா?' - என்றார்.

## 13 வது சீர்திருத்தத்தை ஒரு துளியளவு கூட ஏற்றுக்கோள்ள

இன்றையதினம் யாழில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கடந்த 87ம் ஆண்டு, இந்த 13வது சீர்திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாக கூறி அதனை நிராகரித்து வந்துள்ளார்கள். 13வது சீர்திருத்தம் தான் தீர்வு எனக்கூறி இந்திய நாட்டின் பொம்மைகள், எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயற்பட்டுக்கொண்டு இருந்தும்கூட அவர்கள் இங்கு தேர்தல் கேட்டு வாக்குப் பெற முடியாத சூழ்நிலை தான் இங்கு உள்ளது.

13வது சீர்திருத்தத்தை நியாயப்படுத்துவதற்காக அது தீர்வல்ல, இருக்கிறதை தான் கேட்கிறோம், எமக்கு தேவையானது சமஷ்டி, சுயநிர்ணயம் போன்ற விடயங்களை கூறித்தான் தமிழ் மக்கள் மத்தியில் அதனை திணிக்க பார்க்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கு வந்து தமது முகவர்களைத்தான் சந்தித்தார்களே தவிர பொதுமக்களை சந்திக்கவில்லை. தாங்களே 13ஐ அமுல்படுத்துமாறு கூறிவிட்டு வந்து, இங்கு இருக்கின்ற முகவர்கள் அதனை கதைக்கும் போது ஏதோ ஈழத்தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாக கூறுவது பொருத்தமற்ற கருத்து.

நாங்கள் பாதிக்கப்பட்ட, இன அழிப்புக்குள்ளான ஒரு இனம். போருக்கு பின்னர் தொடர்ச்சியாக இன் அழிப்புக்கு உட்பட்டுள்ள ஒரு இனம். இவை அனைத்திற்கும் காரணம் இந்த ஒற்றையாட்சிக்குள் உள்ள கட்டமைப்புகள். 13வது சீர்திருத்தம் ஒரு துளியளவு கூட தமிழ் மக்களை பாதுகாக்கவில்லை இந்நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள போவதில்லை - என அவர் மேலும் தெரிவித்தார்.

## நெடுமாறன் ஐயா அவர்களை நம்புகின்றோம்

இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

பதினான்காம் திகதி இந்தியாவிற்கு மருத்துவ சிகிச்சைக்காக பயணமாகி உலகத் தமிழ் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் காசி ஆனந்தனையும் சந்தித்து கலந்துரையாடியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரனின் உடல் என காட்டப்பட்டது அவரது உடல் இல்லை என்பதை 2009 மே 20ஆம் திகதியிலிருந்து மறுத்துவருவதாகவும் அத்தோடு டி.என்.ஏ பரிசோதனை செய்யுமாறும் சவால் விட்டு வருகின்றேன். அதற்கான சான்றிதழ் வழங்கப்படவில்லை.

மதிவதனியின் சகோதரியார் பத்து வருடங்களுக்கு முன்னர் அவரது தாயார் இறந்ததை பற்றி அறிவித்த பொழுது கூறிய செய்தி, தமது குடும்பத்தில் அனைவரும் நினைப்பது போல் முழுக்க முடிந்து விடவில்லை, நேராக சந்திக்கும்போது கூறுவேன் எனவும் யாராவது ஒருவராவது உயிருடன் இருப்பார்கள் என்றும் கூறியிருந்தார்.

இதற்கு மேலாக நெடுமாறன் ஐயா அவர்களை நம்புகின்றோம். விரிவான ஈழத் தமிழர்களின் செயல் திட்டங்களில் நெடுமாறன் ஐயா அவர்களும் கவிஞர் காசி ஆனந்தனும் செயல்படுவார்கள் அவர்களுடன் நாங்கள் இணைந்து செயல்படுவோம் எனவும் தெரிவித்திருந்தார்.

அத்தோடு, பிரபாகரன் இல்லை என்பது தொடர்பாக கருணாவும் கத்தரிக்காயும் கூறும் கதைகளும் வியாக்கியானங்களும் தேவையில்லை எனவும் கோபம் வெளியிட்டிருந்தார்.

## நாடாளுமன்றத்துக்குள் இன்று வேடிக்கப்போகும் போராட்டம்!

மேற்படி இரண்டு விடயங்களையும் அடிப்படையாக வைத்து நாட்டின் பல்வேறு இடங்களில் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே நாளை நாடாளுமன்றத்துக்குள்ளும் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

## ராஜபக்சர்களின் குடும்பம் முழு நாட்டையும் சூறையாடியது

மீண்டும் ராஜபக்சர்கள் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்கிறார்கள்.ராஜபக்ச குடும்பம் மக்களாணை என குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை தவறாக வழிநடத்தி ஆட்சியை கைப்பற்றினார்கள்.

ஒரு குடும்பம் முழு நாட்டையும் சூறையாடியது. வரையறையற்ற அரச முறை கடன்களினாலும், அனைத்து அபிவிருத்திகளிலும் மேற்கொள்ளப்பட்ட மோசடியாலும் நாடு பாரிய கடன் சுமையை எதிர்கொண்டது.

ஊழல் மோசடி தொடர்பில் மஹிந்த ராஜபக்ச அவதானம் செலுத்தவில்லை, அகப்படாத வகையில் ஊழல் மோசடிகளை செய்யுங்கள் என அவர் அவரது சகாக்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இறுதியில் நேர்ந்தது என்ன பொருளாதார பாதிப்பு முழு நாட்டையும் வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

எனது 11 வருட ஆட்சிகாலத்தில் யுத்தத்துடன் போரடினேன். ஒரு யுத்தத்தை புரிந்துக் கொண்டு மறுபுறம் நாட்டை அபிவிருத்தி செய்தேன். பதவி காலம் முடிந்த பிறகு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் ஆட்சியை ஒப்படைக்கும் போது நாட்டில் ரூபாவும் இருந்தது, டொலரும் இருந்தது.

நாட்டின் இன்றைய அவல நிலையை கண்டு மனவேதனையடைகிறேன். முழு உலகத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த இலங்கை இன்று ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடியினால் வங்குரோத்து நிலை அடைந்துள்ளதாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

## நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு!

மூலம் கோராதபட்சத்தில் ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது.

நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2020 மார்ச் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார். எனினும், கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக, 2020 ஆகஸ்ட் 5 குறித்த தேர்தல் நடைபெற்றது.

இதன்படி, ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியான கோட்டாபாய ராஜபக்ஷவின் தலைமையில், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு அந்த வருடம் ஆகஸ்ட் 20 ஆம் திகதி கூட்டப்பட்டது.

குறித்த முதல் அமர்வு இடம்பெற்று நேற்று (20) நள்ளிரவுடன் இரண்டு வருடங்களும் ஆறு மாதங்கள் நிறைவடைகிறது.

எனவே, கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலின் பின்னர் அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவுக்கு, அரசியலமைப்பின் 70 1 (அ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் பெயரிலுள்ள படை முகாம் அகற்றப்பட வேண்டும்






மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் பெயரில் படை முகாம் எதற்கு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023 முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வேட்பாளர்கள் அறிமுகத்துடனுன் தேர்தல் பரப்புரை மக்கள் கூட்டம் நேற்றுமுன் தினம்) இடம்பெற்றது.

இந்த பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன் போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், வீதியின் இரண்டு பக்கங்களிலும் மக்களை காணமுடியாத ஒரு நிலை காணப்படுகின்றது. நாம் பார்க்க வேண்டும் என்றால் இராணுவ முகாம்களைத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

வடக்கு கிழக்கினை பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்கள் என்றால் திருகோணமலை மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் தான். எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளான இணைந்த வட,கிழக்கென்பது சாத்தியமாகுமாக இருந்தால், அது நிச்சயமாக சாத்தியமாகும். அப்படி சாத்தியமாக வேண்டுமாக இருந்தால் திருகோணமலை மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் தமிழர்களுடைய கைகளிலே மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நடைபெறவுள்ள இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானதொரு தேர்தல்.

நாங்கள் வீதி வீதியாக இறங்கி இராணுவமே வெளியேறு என கோசங்களை எழுப்புகின்றோம். அதே போன்று இதனை நாடாளுமன்றத்திலும் சொல்லும் ஒரே ஒரு கட்சி தமிழரசு கட்சி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 14 ஆசனங்களிலிருந்து 10 ஆசனங்களுக்கு வாக்கு சரிவு வந்திருக்கின்ற காரணத்தினால், வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் இராணுவமே வெளியேறு என வீதியிலே சொன்னாலும் கூட, இது தமிழ் தேசிய கட்சிகளின் அரசியல்வாதிகள் தங்களுடைய தேர்தல் பரப்புரைக்காக சொல்லுகின்ற கோசமே தவிர இது மக்களுடைய அபிலாசை இல்லை என்ற சந்தேகம் சில வேளைகளில் ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

எங்களுக்கான வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ள காரணத்தினால் சர்வதேசத்துடன் பேசும் போது எங்களுடைய பலம் குறைந்துள்ளதாகவே காணக்கூடியதாக இருகின்றது.

இதன்காரணமாகவே நாம் சொல்கின்றோம் மக்கள் வீட்டு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். இந்த சின்னம் தலைவர் காட்டிய சின்னம், உலக நாடுகளுக்கு நன்கு தெரிந்த சின்னம். ஆகவே மக்கள் இந்த சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். என தெரிவித்தார்.

# இலங்கை கடற்பரப்பில் இந்திய வத்தைகள் மீன்பிடிக்க முயற்சி?

(வாஸ் கூஞ்ஞ)

வத்தைகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் வாரத்தில் இருநாட்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து மீன்பிடிப்பதற்காகன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய இலுவைப்படகுகள் போன்று ஆபத்து இல்லாத வத்தையின் மூலம் மீன்பிடியில் ஈடுபடும்; மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் வாரம் இரு தினங்கள் மீன்பிடிப்பதற்கு பேச்சுவார்த்தை இடம்பெற இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய இலுவைப்படகுகள் 150 குதிரை வலு கொண்ட இயந்திரங்களைக் கொண்டே மீன்பிடியில் ஈடுபடுவதால் இதனால் இலங்கை மீனவர்கள் குறிப்பாக வட மாகாண மீனவர்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதுடன் இப்பகுதி கடல் வளங்களும் அழிக்கப்பட்டு வருவதாக நீண்டகாலமாக இலங்கை மீனவர்கள் போராடி வருகின்றனர்.

இதற்கான சரியான முடிவு எடுக்கப்படாத நிலையில் 30 , 40 குதிரை வலு கொண்ட இயந்திரங்கள் மூலம் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய வத்தை மீனவர்களை மீன்பிடிக்கு அனுமதிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் இலங்கைக்கு வருமானம் ஈட்டும் நிலை ஏற்படுமாகில் இவ் நிதி வட மாகாண மீன்பிடி அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஜப்பான் தூதுவருடனான உத்தியோக பூர்வ சந்திப்பு





(அ . அச்சுதன்)

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் Mlzukoshl hideaki தலைமையிலான உயர் மட்ட குழுவினர் மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமதக் குழு முக்கிய உறுப்பினர்கள் ஆகியோருக்குக்கிடையில் சந்திப் பொன்று 16 மாலை Trinco Bluby cinnamon ஹோட்டலில் இடம் பெற்றது.

இதன் போது சர்வமதக் குழு பற்றிய செயற்பாடுகள், திருகோணமலை மாவட்ட காணிப்பிரச்சனைகள், 13 ம் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தல், தகவல் அறியும் சட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்ஹர் இப்ராஹிம் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டு கழகம் சம்பியன்



மட்டக்களப்பு மாவட்ட காக்காச்சிவட்டை விழிக்கதிர் விளையாட்டுக் கழகம் 32 அணிகளை உள்ளடக்கி நடாத்திய மென்பந்து கிரிக்கெற் போட்டியில் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டு கழகம் 70 ஓட்டங்களினால் வெற்றி பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

காக்காச்சிவட்டை விழிக்கதிர் விளையாட்டு கழகம் 32 விளையாட்டு கழகங்களை உள்ளடக்கி நடத்திய 8 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டுக்கழகம் 70 ஓட்டங்களினால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தினையும் 20,000 ரூபாய் பணப்பரிசிலையும் பெற்று கொண்டது. இது இவ் வருடத்தில் (2023) இக் கழகத்தினால் பெறப்பட்ட இரண்டாவது கிண்ணமாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டு கழகம் 8 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரிலியன்ட் விளையாட்டுகழகம் 7.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 29 ஓட்டங்களைப் மாத்திரமே பெற்றுக் கொண்டது. மெக்ஸ் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த ஜது 20 பந்து வீச்சுகளுக்கு 58 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டதுடன், மிதுசான் ஒரு ஓவரில் 3 விக்கெட்டுகளை தொடர்சியாக கைப்பற்றி ஹெற்றிக் சாதனையையும் ஏற்படுத்தியிருந்தார்.

# நோட்டனில் பேருந்து விபத்து: மூவர் பலி





(தலவாக்கலை பி.கேதீஸ்)

சிவனொளிபாத மலைக்கு வந்து வீடு திரும்பி கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று நேற்று முன் தினம் (19) இரவு நோட்டன் டெப்லோ பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் 26 பேர் காயமடைந்துள்ளதாக நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து (19) ஞாயிற்றுக்கிழமை இரவு 09 மணியளவில் இடம் பெற்றுள்ளது. நோட்டன் தியகல பிரதான வீதியில் இடம் பெற்ற இந்த விபத்தில் குறித்த தனியார் பேருந்து பலத்த சேதம் அடைந்துள்ளதோடு நயனாரத்னகுமாரி (வயது 33) கசுனி (வயது 22) டிலான் கௌசல்ய (வயது 33) ஆகியோர் சம்பவத்தில் உயிரிந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரனைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வட்டவளை, கினிகத்தேன மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹரகமவிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் வேலை செய்யும் பணிப்பெண்கள் குழு ஒன்று சிவனொளிபாதமலைக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காயமடைந்தவர்களை பேருந்திலிருந்து மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு உதவிசெய்தனர்.

இதேவேளை நேற்று முன் தினம் இரவு (19) இரண்டு பேரின் சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் பேருந்தில் வந்த ஒருவர் காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று காலை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பேருந்தை சோதனையிட்டபோது காணாமல் போன இளைஞனின் சடலம் பேருந்துக்கு அடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென தெரிவித்த நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25579 | கு | 1975**
பருத்தித்துறை |இந்து
Teacher|இலங்கை|செவ் : 2
உத்திரட்டாதி (மீனம்)
173 செ.மீ | சைவம்

**25481 | வே | 1976**
சுதுமலை |இந்து
Consultant Respiratory
Physician |UK
ரேவதி (மீனம்) | 168 செ.மீ

**25506 | வே | 1978**
புலோலி | இந்து
Staf | Finland
ரேவதி (மீனம்)
168 செ.மீ

**25516 | வே | 1979**
மட்டக்களப்பு | இந்து
Doctor | இலங்கை
திருவோணம் (மகரம்)
170 செ.மீ

**25483 | வே | 1979**
கரம்பொன் |இந்து
Engineer | US
பூசம் (கடகம்)
179 செ.மீ

**25559 | வே | 1981**
பருத்தித்துறை | இந்து
Chef | Malta
பூரம் (சிம்மம்)
181 செ.மீ

**25536 | கு | 1983**
முல்லைதீவு |இந்து
Driver | கட்டார்
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | சூ.செவ் : 12

**25494 |வே |1985**
மானிப்பாய் | இந்து
Store Manager |இலங்கை
கேட்டை (விருச்சிகம்)
164 செ.மீ

**25502 | வே | 1985**
தாவடி | இந்து
Sales Rep | இலங்கை
ரோகிணி (இடபம்)
168 செ.மீ

**25498 | வே | 1985**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Own Business |இலங்கை
ரோகிணி (இடபம்)
179 செ.மீ

**25518 | வே | 1986**
மானிப்பாய் |இந்து
Chef | பிரான்ஸ்
ஆயில்யம் (கடகம்)
.. செ.மீ

**25545 | கு | 1987**
அம்பாறை | இந்து
Senior QS | இலங்கை
மகம் (சிம்மம்)
162 செ.மீ | செவ் : 4

**25519 | வே | 1987**
காரைநகர் | இந்து
Drafting Manager| Australia
ரோகிணி (இடபம்)
175 செ.மீ | சூ.செவ் : 9

**25504 | வே | 1987**
தாவடி | இந்து
Sales Manager | இலங்கை
உத்திராடம் (மகரம்)
182 செ.மீ | சூ.செவ் : 12

**25503 | வே | 1987**
காரைநகர் |இந்து
Accountant | இலங்கை
அஸ்வினி (மேடம்)
183 செ.மீ | செவ் : 8

**25578 | வே | 1987**
வவுனியா |இந்து
Stastion Master | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 2

**25582 | வே| 1988**
திருகோணமலை |இந்து
Admin
இலங்கை
181 செ.மீ

**25497 | வே | 1988**
அல்லைப்பிட்டி |இந்து
Floor Manager | Australia
திருவாதிரை (மிதுனம்)
168 செ.மீ | செவ் : 1

**25547 | வே | 1989**
கிளிநொச்சி| இந்து
Staff | Australia
மூலம் (தனுசு)
173 செ.மீ | சூ.செவ் : 10

**25532 | வே | 1989**
கல்லடி | இந்து
Network Engineer | UK
உத்தரம் (சிம்மம்)
175 செ.மீ | சூ.செவ் : 12

**25529 | கு | 1989**
மன்னார் | கிறிஸ்தவம்
Management Serivce
Officer | இலங்கை
170 செ.மீ

**25555 | வே | 1990**
அல்வாய் |இந்து
Public Mgmt Assistant
ரோகிணி (இடபம்) |இலங்கை
176 செ.மீ

**25512 | வே | 1990**
கரவெட்டி | இந்து
Senior Executive |இலங்கை
அவிட்டம் (மகரம்)
176 செ.மீ

**25543 | வே | 1991**
நல்லூர் | இந்து | சைவம்
Director| இலங்கை
பூராடம் (தனுசு)
155 செ.மீ | சூ.செவ் : 12

**25491 | வி | 1991**
அம்பாறை |இந்து
Pawning Office Incharge
பூராடம் (தனுசு) | இலங்கை
176 செ.மீ

**25530 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Mortgage Manager
அஸ்வினி (மேடம்) | கனடா
167 செ.மீ

**25537 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Doctor | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
176 செ.மீ | செவ் : 4

**25542 | வே | 1991**
புத்தூர் | இந்து
Staff | UK
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | சூ.செவ் : 5

**25488 | வே | 1992**
அளவெட்டி| இந்து
QS | கட்டார்
கேட்டை (விருச்சிகம்)
183 செ.மீ

**25568 | சா | 1992**
மிருசுவில் |இந்து
Civil Engineer | சிங்கப்பூர்
ஆயில்யம் (கடகம்)
174 செ.மீ | செவ் : 2

**25489 | வே | 1993**
கோப்பாய் |இந்து
Lecturer | இலங்கை
சித்திரை (கன்னி)
183 செ.மீ | செவ் : 2

**25511 | வி | 1993**
கொக்குவில் |இந்து
Software Engineer
சதயம் (கும்பம்) | சிங்கப்பூர்
169 செ.மீ

**25554 | வே | 1994**
யாழ் நகர் | இந்து
Engineer | Australia
மிருகசீரிடம் (மிதுனம்)
183 செ.மீ

**25586 | கோ | 1994**
சண்டிலிப்பாய்| இந்து
Hotel | கனடா
ரோகிணி (இடபம்)
176 செ.மீ

**25528 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
IT | இலங்கை
மகம் (சிம்மம்)
173 செ.மீ | செவ் : 12

**25563 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
Teacher | இலங்கை
மகம் (சிம்மம்)
161 செ.மீ | செவ் : 1

**25567 | வே | 1995**
காரைநகர் | இந்து
Ass. Quality Manager
அஸ்வினி (மேடம்)
175 செ.மீ |இலங்கை

**25490 | வே | 1995**
காரைநகர் | இந்து
Production Manager | Italy
பூரட்டாதி (கும்பம்)
192 செ.மீ | செவ் : 2

**25605 |வே+ந| 1997**
கொடிகாமம் | இந்து
Staff | கட்டார்
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ

**25593 | கு | 1999**
குரும்பசிட்டி | Non RC
Trainning | இலங்கை
திருவோணம் (மகரம்)
155 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# ஊழல் ஆட்சியாளர்களை உருவாக்கிய ஜே.வி.பி. அரசியல் டீலில் ஈடுபட்டுள்ளது

## எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்





நாட்டுக்கு தீர்வுகளை வழங்குவோம் என்று தம்பட்டம் அடிக்கும் சிவப்பு தம்பிமார்கள் 2005 இல் ராஜபக்சர்களைஆட்சிக்கு கொண்டு வருவதற்காக வீடு வீடாகச் சென்றதை மறக்க முடியாது எனவும்,பல்வேறு காலகட்டங்களில்அவர்கள் ஊழல்வாதிகளை ஆட்சிக்கு கொண்டுவர பல்வேறு அரசியல் தந்திரங்களையும்,அரசியல்ஒப்பந்தங்களையும் முன்னெடுத்தனர் எனவும்,இந்நாட்டின் ஊழல் மிகுந்த ஆட்சியாளரை உருவாக்கி நாட்டுமக்களை அடிமைகளாக்கியவர்கள் தான் இன்று தாமே ஒரே தீர்வு என்று கூறிக்கொண்டு அதே அரசியல்வியாபாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு தீர்வுகளை வழங்குவதாக கூறும் மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வஇணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு,அவர்கள் தனியார் சொத்துரிமையை தடை செய்வதாகவும், அவ்வாறு செய்தால்,வியாபாரிகளும், தொழில்முனைவோரும் நலிவடைவார் என தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர்,அவ்வாறு செய்தால் மக்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தீவிர சோசலிச சித்தாந்தமாக அது நடைமுறைப்படுத்தப்பட்டால்,ஒரு நாடாக மீண்டும் முன்னேற முடியாதுபோகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தீவிர சோசலிச கம்யூனிச நாடான சீனா,அமெரிக்காவைத் தாண்டிய முதலாளித்துவப் பொருளாதார போக்கை கடைப்பிடிப்பதாகவும்,உங்களின் சொத்துக்கள், வீடுகள், வணிகங்கள் மற்றும் கடைகளை பறிக்கும் தனியார் சொத்துக்களை பறிமுதல் செய்யும்யுகத்தை உருவாக்க இடமளிக்க வேண்டாம் எனவும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளைக் கொண்டாடவும்,பிரபுக்களின் குடியிருப்பு வாசஸ்தலங்களைப் பராமரிக்கவும்,142 இலட்சம் ரூபா செலவில் நடமாடும் கழிப்பறைகளைப் பயன்படுத்தவும் பணம் வைத்திருக்கும் இந்தஅரசாங்கத்திடம் தேர்தலுக்கு பணம் இல்லை எனவும்,துயரிலும் மகிழ்ச்சியிலும் அரசியல்வாதிகள் மக்களுடனேஇருக்க வேண்டும் என்பதைத்தான் இந்த கோழைத்தனமான முதுகெலும்பற்ற அரசாங்கத்திற்கு சொல்லவேண்டியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பல்வேறு துருப்புச் சீட்டுகளை காட்டி தேர்தலை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ அரசாங்கம்முயற்சித்தால்,மக்கள் பலத்துடன் எப்படியேனும் தேர்தலை பெறுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர்சுட்டிக்காட்டினார்.

இந்நேரத்தில் நாட்டுக்கு நன்மை பயக்கும், நடைமுறை ரீதியாக நாட்டுக்கு சேவை செய்ய முடியுமான ஒரு மாற்றுஅணியே நாட்டுக்குத் தேவைப்படுவதாகவும்,75 வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்த அரசியல் கட்சிகள்இந்நாட்டிற்கு எந்த ஒரு பணியையும் மேற்கொள்ளவில்லை என்றாலும்,கடந்த 3 வருடங்களில் எந்தவிதஅரசியல் அதிகாரமும் இன்றி ஐக்கிய மக்கள் சக்தி மூச்சு மற்றும் பிரபஞ்சம் திட்டங்களின் கீழ்மக்களுக்காக பல பணிகளை முன்னெடுத்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கல்முனையில் சக்தி தையல் ஆடைத் தொழிலகம் திறப்பு விழா





( எஸ்.எம்.எம்.றம்ஸான் , அஸ்ஹர் இப்றாஹிம் )

கல்முனை பாண்டிருப்பில் வசித்த புலம்பெயர் உறவுகளின் அனுசரனையில் பாண்டிருப்பு 2 ல் அமைந்துள்ள 'ரீ வடபத்திர காளியம்மன் ஆலய கட்டிடத்தில் சக்தி தையல் ஆடைத் தொழிலகம் சமய நிகழ்வுடன் அண்மையில் திறந்து வைக்கப் பட்டது.

சக்தி ஆடைத் தொழிலகத்தின் இணைப்புச்செயலாளர் சீ.ரவிகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இத் தொழிலகத்தை திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தினி யோகேஸ்வரன், விஷேட அதிதியாக சுவிற்சர்லாந்தின் புலம்பெயர் உறவுகளின் பிரதிநிதியும், இந்நிகழ்வுக்கு அனுசரனை வழங்கியவர்களின் ஒருங்கிணைப்பாளருமான இ.விஜயகுமாரன் மற்றும் அதிதிகளாக 'ரீ அரசடியம்மன், 'ரீ சித்தி விநாயகர் 'ரீ வடபத்திர காளியம்மன் கோவில் தலைவர் சி.சண்முநாதன், 'ரீ மகாவிஷ்ணு ஆலய தலைவர் ஆ.செல்லத்துரை, பாண்டிருப்பு 2 பி கிராம சேவகர் கே.வேதநாயகம் உட்பட மாதர் சங்கத்தினரும் ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முதலைக்குடா மகா வித்தியாலய அதிபராக சுந்தரநாதன் பதவி ஏற்பு





(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலய முதலைக்குடா மகாவித்தியாலய அதிபராக இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த வைரமுத்து சுந்தரநாதன் நேற்று (20) திங்கட்கிழமை கடமையை ஏற்றுக் கொண்டார்.

அங்கு அதிபராக இருந்த டரி. கோபால பிள்ளை தேர்தலில் அபேட்சகராக இருப்பதால் அவர் ஒய்வு பெற்று சென்றிருந்தார்.

பதவியேற்பு வைபவத்தில் மட்டு. மேற்கு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் டி. யசோதரன் முன்னாள் அதிபர் சிவ. அகிலேஸ்வரன் பட்டிப்பளை உபதவிசாளர் பொன். கோபாலபிள்ளை உப அதிபர் ரி.சிவநடேஸ் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ். பரமேஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காயான்மடு வித்யாலயத்தில் அதிபராக இருந்த சுந்தரநாதன் நேற்று அங்கிருந்து சிரேஸ்ட ஆசிரியரிடம் கடமையை ஒப்படைத்து விட்டு வெளியேற முயற்சித்த பொழுது அங்கு பாடசாலை சமூகம் அவரை வெளியேற விடாமல் தடுத்தது .

எங்களுக்கு சுந்தரநாதன் அதிபர் தான் வேண்டும். வேறெவரும் தேவையில்லை என்று பிரதான வாயிலை மூடி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது .

அதைத் தொடர்ந்து மட்டு.மேற்கு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் கே.மகேந்திரகுமார் தலைமையிலான குழுவினர் அங்கு விரைந்து அவர்களை சாந்தப்படுத்தி விரைவில் ஒரு நிரந்தர அதிபர் நியமித்து தருவதாக உறுதி அளித்ததையடுத்து அவர்கள் விலகிச் சென்றனர்.

# செய்வோம் அறக்கட்டளையின் முதலாவது விருது - 2023 வழங்கள் விழா

(அபு அலா )







பயன்களை எதிர்பாராமல் நன்நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக சேவைகளை, சமூக வெளியில் கொண்டு செல்லாம் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து வருகின்றவர்ளூடாக, கற்றுக்கொண்ட பாடங்களையும், அவர்களின் முன்மாதிரியான செயற்றிட்டங்களைப்பற்றி இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக முன்னிருத்தி செயற்படவேண்டும். அப்போதுதான் செய்வோம் அறக்கட்டளையின் முதலாவது விருது - 2023 வழங்கள் விழா இளம் தலைமுறையினர் இவ்வாறான பணிகளைச் செய்ய முன்வருவார்களென சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை அன்பின் பாதை சமூகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் விளிம்புநிலை மக்களின் வாழ்வை ஒளியேற்ற தம் வாழ்நாளினை அர்ப்பணிக்கும் பெருமக்களை கொண்டாடி மகிழல் என்ற தொனிப்பொருளில் அறம் செய்வோம் அறக்கட்டளையின் முதலாவது விருது - 2023 வழங்கள் விழா (18) திருகோணமலை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக சேவைகளைச் செய்யவேண்டும் என்ற நன்நோக்கில் இளம் வயதிலிருந்தே தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டுவருகின்ற சன்முகா மகளிர் இல்லத்தின் முகாமையாளர் செல்வி விமலா நடராஜாவின் சமூக சேவைகளைப் பாராட்டியாக

வேண்டும். அவர் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு மறைமுகமாக பல்வேறுபட்ட சமூக சேவைகளைச் செய்து வருவதென்பது மிக இலகுவான விடயமல்ல. அது கடும் சவால் மிக்கதொன்றாகும். இவ்வாறான பணிகளைச் செய்து வருகின்றவர்கள் தங்களின் சேவைகள் சமூக வெளியில் கொண்டு செல்வதை எதிர்பார்ப்பதும் இல்லை, விரும்புவதும் இல்லை.

இவரைப்போன்ற பலர் இன்னும் மறைமுகமாக இருந்துகொண்டு செயற்பட்டு வருவார்கள். அவ்வாறானவர்களையும் அறம் செய்வோம் அறக்கட்டளை அடையாளம் கண்டு அவர்களின் நற்செயற்பாட்டினை இளம் தலைமுறையினர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களையும் இவ்வாறான சமூக செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் உதவி புரியவேண்டும்.

அறம் செய்வோம் அறக்கட்டளை கடந்த மூன்றாண்டு காலமாக இலங்கையிலுள்ள காப்பகங்கள், வலையமைப்புக்கள், சமூக சேவை நிறுவனங்கள் ஊடாக சிறுவர்கள், விசேட தேவையுள்ளோர் மற்றும் முதியோர்களின் வாழ்வை மேம்படுத்த பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அவர்கள் மக்களின் மேம்பாட்டிற்காகவே தங்களின் நேரகாலங்களைச் செலவிடுகின்றனர். அவர்களின் சேவைகளுக்கு எங்களாலான உதவிகளைச் செய்ய முன்னிப்போம் என்றார்.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் (திருமதி) றிஸ்வாணி றிபாஸ், சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேல் உள்ளிட்ட பல அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கடந்த பல ஆண்டு காலமாக, தன்னலமற்ற ஒன்றிணைந்த எண்ணிலடங்கா சமூக சேவைகளைச் செய்துவருகின்ற சன்முகா மகளிர் இல்லத்தின் முகாமையாளர் செல்வி விமலா நடராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி 2023 ஆம் ஆண்டுக்கான அகல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுன் அவருக்கு 2 இலட்சம் ரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அருந்ததி
இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524

# மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25607 | வே | 1974**
கரணவாய் | இந்து
இலங்கை
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ

**25499 | வே | 1982**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Web Analytics | இலங்கை
விசாகம் (விருச்சிகம்)
164 செ.மீ

**25546 | வே | 1982**
பருத்தித்துறை | இந்து
Inspector | இலங்கை
உத்திராடம் (மகரம்)
155 செ.மீ | Divorced

**25572 | வே | 1983**
சிறுபிட்டி | இந்து
Teacher | இலங்கை
மூலம் (தனுசு)
152 செ.மீ | செவ் : 7

**25538 | வே | 1984**
காரைநகர் | இந்து | செவ் :4
Development Officer | SL
மிருகசீரிடம் (மிதுனம்)
154 செ.மீ | Divorced

**25531 | வ | 1986**
மாவிட்டபுரம் | இந்து
Administrative Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
149 செ.மீ | செவ் : 2

**25469 | வே | 1988**
வண்ணார்பண்ணை | இந்து
Doctor | UK
பூரம் (சிம்மம்)
173 செ.மீ

**25614 | ப | 1989**
திருகோணமலை | இந்து
இலங்கை
சுவாதி (துலாம்) | செவ் : 1
158 செ.மீ

**25589 | வே | 1989**
நல்லூர் | இந்து
Computer Typing
மகம் (சிம்மம்) | இலங்கை
153 செ.மீ | Divorced

**25613 | வே | 1989**
திருகோணமலை | இந்து
Tailor | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
161 செ.மீ

**25585 | ப | 1989**
தெல்லிப்பளை | இந்து
Beautician | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
161 செ.மீ c செவ் : 1

**25611 | ப | 1989**
பருத்தித்துறை | இந்து
Gram Niladhari | இலங்கை
மூலம் (தனுசு)
164 செ.மீ | செவ் : 7

**25610 | கோ | 1991**
சுன்னாகம் | Non RC
Software Engineer
இலங்கை
156 செ.மீ

**25590 | வே | 1991**
திருகோணமலை | இந்து
Engineering Coordinator
பூரட்டாதி (கும்பம்) | சு.செவ் :12
161 செ.மீ | சைவம்

**25520 | சா | 1992**
கொடிகாமம் | இந்து
கனடா
பூரம் (சிம்மம்)
169 செ.மீ

**25496 | வே | 1992**
வரணி | இந்து
Teacher(Graduate) | இலங்கை
திருவாதிரை (மிதுனம்)
165 செ.மீ | செவ் : 12

**25556 | வி | 1993**
அழியாளை | இந்து
Accountant | இலங்கை
ரோகிணி (இடபம்)
160 செ.மீ

**25591 | கு | 1993**
பருத்தித்துறை | இந்து
Development Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
170 செ.மீ | செவ் : 7

**25580 | ந | 1993**
சாவகச்சேரி | இந்து
Business | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 1

**25566 | ந | 1993**
யாழ் நகர் | இந்து
Teacher | இலங்கை
பூசம் (கடகம்)
155 செ.மீ | செவ் :2

**25574 | கோ | 1994**
கொடிகாமம் | இந்து
Development Officer
கார்த்திகை (இடபம்) | செவ் :12
160 செ.மீ | இலங்கை

**25569 | வே | 1994**
யாழ் நகர் | இந்து
Senior Software Engimneer
பூரட்டாதி (கும்பம்) | இலங்கை
172 செ.மீ

**25604 | ப | 1994**
கொடிகாமம் | இந்து
Ass. Lecturer | இலங்கை
சதயம் (கும்பம்)
167 செ.மீ | செவ் : 2

**25521 | வே | 1994**
புங்குடுதீவு | இந்து
Account Assistant
பூசம் (கடகம்) | இலங்கை
150 செ.மீ

**25540 | வி | 1994**
யாழ் நகர் | இந்து
மூலம் (தனுசு)
இலங்கை
155 செ.மீ

**25539 | வே | 1994**
புலோலி | இந்து
Office Admin | இலங்கை
மூலம் (தனுசு)
165 செ.மீ | செவ் : 2

**25467 | ந | 1994**
யாழ்ப்பாணம் | கிறிஸ்தவம்
Medical Company
பூராடம் (தனுசு)
152 செ.மீ | இலங்கை

**25570 | கோ | 1994**
மாதகல் | இந்து
Beautician | இலங்கை
அஸ்வினி (மேடம்)
162 செ.மீ | செவ் : 1

**25525 | வே | 1995**
கொக்குவில் | இந்து
இலங்கை
பூரம் (சிம்மம்)
160 செ.மீ | செவ் : 4

**25565 | கு | 1995**
திருகோணமலை | இந்து
Officer | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ | செவ் : 1

**25584 | வே | 1995**
திருகோணமலை | இந்து
Accountant | இலங்கை
உத்தரம் (கன்னி)
155 செ.மீ | செவ் : 7

**25515 | வே | 1996**
காரைநகர் | இந்து
Associative Software Eng.
சதயம் (கும்பம்) | இலங்கை
158 செ.மீ | சு.செவ் : 10

**25464|வே+கோ|1996**
நீர்வேலி | இந்து
இலங்கை
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**25596 | வே | 1997**
காரைநகர் | இந்து
இலங்கை
மூலம் (தனுசு)
153 செ.மீ | செவ் :12

**25501 | வே | 1997**
வவுனியா | இந்து
Student | இலங்கை
சதயம் (கும்பம்)
173 செ.மீ

**25480 | வே | 1997**
நவாலி | இந்து
Laboratory Technician | UK
திருவோணம் (மகரம்)
152 செ.மீ | செவ் : 1

**25544 | சா | 1999**
மிருசுவில் | இந்து
Nurse | இலங்கை
மிருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ | சைவம்

**25550 | கோ | 2000**
கொடிகாமம் | இந்து
இலங்கை
பூராடம் (தனுசு)
148 செ.மீ | சு.செவ் : 3

**25561 | சா | 2001**
மிருசுவில் | இந்து
இலங்கை
உத்திரட்டாதி (மீனம்)
154 செ.மீ

**25552 |வே+ந| 2002**
புங்குடுதீவு | இந்து
இலங்கை
மஜருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ

அருந்ததி பிரைவட் லிமிடட்
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்




# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்

## ANUPIRA BEAUTY PARLOUR &UNIVERSAL ACADEMY

# PIRAGASH ANUSHA

## அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி

Arunthathee
COLOMBO 2023

அருந்ததி நிறுவனத்தின் 7வது மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு 10.01.2023 Galadari Hotel இல் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ் மணப்பெண் அலங்கார காட்சியில் அழகுக்கலை துறையில் 2 வருட அனுபவம் கொண்ட Hair & Beauty பாடநெறியில் Diploma தேர்ச்சியினை பெற்ற மற்றும் ஆரி வேர்க்கிலும் தேர்ச்சி பெற்ற Anupira Beautry Parlor & universal Academy உரிமையாளரான பிரகாஷ் அனுஷாவின் மணப்பெண் அலங்கார காட்சி.





வீடியோ வடிவில் பார்ப்பதற்கு










# பண்டா செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றியிருந்தால் நாடு இந்த அளவிற்கு உயிர் சேதங்களைக் கண்டிருக்காது

(ரக்ஸனா)

பண்டா செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இந்த நாடு இந்த அளவிற்கு உயிர் சேதங்களைக் கண்டிருக்காது ஊடகவியலாளர்கள்கூட மரணித்திருக்க மாட்டார்கள். என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்குமாறு கோரி கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் சனிக்கிழமை(18.02.2023) மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள மகஜரை நிட்சயமாக நான் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் கையில் பாரப்படுத்துவேன். இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணங்கள் நிறைவேறும்என நான் நினைக்கவில்லை. ஏனெனில் கடந்த காலங்களில் 50 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் இதுவரையில் எந்தவொரு ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைத்ததாகத் தெரியவில்லை.

மாறி மாறி இந்த நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்களின் காலத்தில் இவ்வாறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக ராஜபக்ஸ சகோதரர்களின் ஆட்சிக்காலத்தில் அதிகமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். இந்த நாட்டிலே அடிப்படை மனித உரிமைகளுக்கும், ஜனநாயக அரசியல் உரிமைகளும் இல்லை. இதனைவிட அரசியலமைப்பை மீறிக்



கொண்டு செயற்படும் நாடாகவும், அரசாகவும்தான் இந்த நாடு இருந்து வருகின்றது.

வடகிழக்கிலே 2009 மே இல் ஒரு லெட்சத்திற்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டாலும், படையினரிடம் கையளிக்கப்பட்டு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இவ்வாறான தொரு நாட்டிலேதான் குறிப்பாக நீதியில்லாத நாட்டிலே தமிழ்; மக்களாகிய நாங்கள் நீதியை வேண்டி நிற்கின்றோம். இந்த நிலையில்தான் உளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி நிருணயிக்கப்பட்டுள்ளது. அந்த தேர்த்தல்கூட நடைபெறுமா? அல்லது நடைபெறாதா? என்ற நிலமையும் காணப்படுகின்றது. மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்குரிய தேர்தலை அரசாங்கம் எந்த காரணங்களைக் கூறியாவது குறிப்பாக பொருளாதார நிலமையைக் கூறியாவது தேர்தலை நடத்தாமலிருக்க அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சனைக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி மாகாணசபை முறைமைக்கு முழு அதிகாரங்களையும் பரவலாக்கி இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 13 வது திருத்தச் சட்டத்தை ஓரளவாவது நிறைவேற்றுவதற்காக இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் முன்வந்திருக்கின்றார். ஆனால் புத்த பிக்குகள் 13 திருத்தச்சட்டம் அல்லை தமிழர்களுக்கு எந்தவிதமான உரிமைகளையும் கொடுக்கக் கூடாது என போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

1956 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா, தந்த செல்வநாயகத்துடன் பண்டா செல்வா ஒப்பந்தத்தை ஏற்படுத்திய போதும், அப்போது புத்த பிக்குகள் கொழும்பிலிருந்து கண்டிக்கு ஜே.ஆர் அவர்களது தலைமையிலே ஒரு ஊர்வலத்தை நடாத்தியிருந்தார்கள். இதனால் அந்த ஒப்பந்தம் நிலைவேறாமல் சென்றிருந்தது. அந்த ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இந்த நாடு இந்த அளவிற்கு உயிர் சேதங்களைக் கண்டிருக்காது ஊடகவியலாளர்கள் கூட மரணித்திருக்கமாட்டார்கள். இந்நிலையில் 13 வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு புத்தபிக்குகள் எதிராக இருப்பது இந்த அழிந்த நாட்டை மீண்டும் மீண்டும் அழிப்பதற்கான எடுகோளாகவுள்ளது. எனவே அவ்வப்போது ஊடகவியலார்களின் படுகொலைகளுக்கும், காணாமலாக்கப்பட்டதற்குமாக நீதிவேண்டிப் போராடுகின்றோம், எனவே அற்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# கல்முனை போது நூலகத்திற்கு தனிநபரின் பெயரைச் சூட்ட அனுமதியோம்

## மாநகரசபை தமிழ் உறுப்பினர்கள் போர்க்கோடி

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை பொது நூலகத்திற்கு தனிநபரின் பெயரைச் சூட்ட முனைவதை வன்மையாக கண்டிக்கிறோம். பெயரை மாற்றினால் இனமுரண்பாடு உருவாக வாய்ப்புள்ளது.

என கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகியோர் தெரிவித்தனர்.

கல்முனையில் நேற்று (17) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் மேற்கண்டவாறு தத்தமது கருத்துக்களில் தெரிவித்தனர்.

இவ் விசேட செய்தியாளர் சந்திப்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகியோர் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்;

கல்முனை மாநகர சபை இம்மாத அமர்வில் கல்முனை பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சரான ஏ.ஆர். எம் மன்சூரின் பெயரை சூட்டுவதாக மாதாந்த நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

அதுவும் அமர்விற்கு முன்னர் உறுப்பினர் ஹென்றி போன்ற வர்களுடன்



ஆனால் ஏனையதமிழ் உறுப்பினர்களை அழைக்காமல், மூடிய அறைக்குள் பேசியதாக அறிகிறோம்.

கடந்த காலங்களில் முன்னாள் அமைச்சராக செயற்பட்ட, மன்சூர் இன மத பேதங்களின்றி சிறப்பான சேவைகள் செய்தவர். தமிழ் மக்களுக்கும் பல வழிகளில் உதவியவர். அவர் போன்று ஒரு முஸ்லிம் தலைவர் இன்றில்லை.அந்த குறைபாடுதான் இன்று இனமுரண்பாட்டிற்கு காரணம். அவர் நல்லவர். அதில் இருவேறு கருத்துக்கிடமில்லை. இருந்த போதிலும் தற்போது எதிர்வரும் தேர்தலை குறிவைத்து சிலர் இவ்விடயத்தை அரசியலாக்கி மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தமுனைகின்றனர். அதன் வெளிப்பாடே இத் தனிநபர் பிரேரணையாகும்.

கல்முனை பொது நூலகமானது இரு சமூகத்தை சேர்ந்தவர்களின் பொதுச்சொத்து.இந்த நூலகத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்படுவதை சிலர் மறைமுகமாக முன்னெடுக்கின்றனர்.இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.சில அரசியல்வாதிகளே தங்களது அபிலாசைகளை நிறைவேற்ற இவ்வாறு செயற்படுகின்றனர்.தேர்தல் காலங்களில் தான் இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.கல்முனை மாநகர கட்டடத்தில இயங்குகின்ற நூலகமானது இதுவரை பெயர்ப்பலகை இல்லாமல் இயங்கி வருவதை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அண்மையில் அங்கு மாநகர சபை பெயர்ப்பலகையை நாட்ட ஏற்பாடு இடம் பெற்றது. அதனை ஒருவர் கண்டு அடித்து விரட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அது கல்முனை பொது நூலகம் என்றே இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. அதுவே தொடரவேண்டும் என்பது அனைவரினதும் அபிலாசையாகும்.

ஆனால், ஒரு தனி நபரின் பெயரை இந்த நூலகத்திற்கு ஏன் தற்போது சூட்ட முயற்சிக்கின்றீர்கள் என கேட்கின்றோம்.தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த செயற்பாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம்.ஏனெனில் இனங்கள் இரண்டும் ஒன்றுபட்டது தான் கல்முனை பிரதேசம்.கல்முனை மாநகர சபை இரு சமூகத்திற்கும் சொந்தமானது. எனவே இனியாவது இச்செயற்பாடுகளை தவிர்த்து இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தாதீர்கள் என கேட்டுக்கொள்கின்றோம்.என குறிப்பிட்டனர்.

# திருக்கோணேஸ்வர பெருமானின் வருடாந்த நகர்வலம் ஆரம்பம்..!





(அ . அச்சுதன்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை அருள் மிகு மாதுமை அம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வர பெருமானின் வருடாந்த நகர்வலம் நேற்று மாலை (19) ஆரம்பமானது.

மாலை 6.00 மணிக்கு திருக்கோணேஸ்வர பெருமான் மஹா கணபதி, வீரசக்தி, மாதுமை அம்பாள் சமேதராக கோயிலில் இருந்து புறப்பட்டு திருகோணமலை நகரை வலம் வருவதை காணலாம்.

இச்சிறப்பு மிக்க இந்த நகர்வலம் 23-02-2023 வியாழக்கிழமை வரை ஐந்து நாட்கள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களை பாதாளத்தில் தள்ளும் அரசாங்கத்தின் சதி குறித்து வெளிப்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர்

புதிய சட்டமொன்றின் ஊடாக,மத்திய வங்கியின் தலையீட்டின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் விவசாய செய்கைகளுக்கு,வியாபார முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைக் கடன்களை முற்றாக இரத்து செய்வதற்கு யானை காகம் மொட்டு அரசாங்கம் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில்,பல்வேறு சந்தர்ப்பங்களில்,குறைந்த வட்டி விகிதத்தில் நிதிக் கடன்களை வழங்க மத்திய வங்கி உதவியதாகவும்,சுனாமி அனர்த்தம் வந்த போது அழிந்து போன தொழில் முயற்சிகளை மீள உருவாக்கவும்,வியாபார முயற்சிகளையும் மீள உருவாக்கவும் 5,6 சதவீத வட்டியில் கடன் வழங்கியதாகவும்,உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது சுற்றுலா வணிகம் வீழ்ச்சி கண்ட போது சுற்றுலா வணிகத்தில் உள்ளவர்களுக்கு பெரும்பாலும் வட்டியில்லா கடன்கள் இதன் அடிப்படையிலையே வழங்கப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவா என தான் கேட்க விரும்புவதாகவும்,இது மக்களின் வாழ்க்கையை அழிக்கும் முன்மொழிவாகவும் எனவும்,இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தாம் கோரியதாகவும்,அக்கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சந்தை வட்டி விகிதம் 15 சதவீதமாக இருந்தபோது,விவசாயிகளுக்கு 7 சதவீத குறைந்த வட்டியில் கடன் வழங்கியதாகவும், வங்கிக்கு 8 சதவீதம் நஷ்டம் ஏற்பட்டாலும் மத்திய வங்கி குறித்த நஷ்டத்தை ஈடு செய்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். தற்போதைய அரசாங்கம் இந்த வட்டி மானிய கடனை இரத்து செய்ய முயல்வதாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் உத்தரவாதிகள் திட்டத்தை நிறுத்தவும் முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவனெல்ல நகரில் (19) இடம் பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் போதிகள், துவிச்சக்கர வண்டி வழங்கல்





(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் 2001,2004 ஆம் ஆண்டில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்,துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டதுடன் வீடும் புனருத்தாரணம் செய்து வழங்கப்பட்டது.

தங்களுடன் கல்வி கற்று நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக உயிர்நீத்த சக மாணவ நண்பர்களின் ஆத்மா சாந்தி வேண்டி வந்தாறுமூலை எழுச்சிக் கிராமம் பலாச்சோலையில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இவ் மனிதநேய உதவி வழங்கப்பட்டது.விறகு வியாபாரம் செய்வதற்கு துவிச்சக்கர வண்டியும் வெள்ளம் காராணமாக வீட்டில் வசிக்க முடியாமல் துன்பமடைந்த குடும்பமொன்றுக்கு வீட்டினை புணர்தாரணம் செய்ததுடன் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.சுகுமார் பதிவாளர் திருமதி த.பஞ்சாட்சரம் உலகலாம் நூலாசிரியர் கலாநிதி ந.பிரதீபன் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.தங்களது மக்கள் பணி தொடரும் என மேற்படி அமைப்பினர் தெரிவித்தனர்.

# களைகட்டிய இந்திய கலைஞர்களின் கர்நாடக சங்கீத இசைக் கச்சேரி!

( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியக் கலைஞர்கள் கலந்து சிறப்பித்த கர்நாடக சங்கீத இசைக்கச்சேரி நிகழ்வானது நேற்று முன்தினம் மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய, வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் இறைவணக்கத்தினைத்தொடர்ந்து தமிழ் வாழ்த்தானது மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர் கு.விநாயகமூர்த்தியால் இசைக்கப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க கணக்காய்வாளர் இரா.புவிராசசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த இசைக்கலைஞர்கள் , கலாநிதி வி.அருந்ததி ( வாய்ப்பாட்டு) , வைக்கியம் பத்மா கிருஷ்ணன் ( வயலின் ) , கலாநிதி ஜி.பாபு ( மிருதங்கம்) , கடநாட அனந்த கிருஷ்ணன் ( கஞ்சிரா) , வாழப்பள்ளி கிருஷ்ணகுமார் ( கடம்) ஆகியோரால் மிகவும் சிறப்பாக கர்நாடக சங்கீத இசைக்கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்தியக் கலைஞர்கள்,பிரதம அதிதி ஆகியோர் மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

## சொல்லத் துடிக்குது மனசு: 02

# திருமண வீட்டிலிருந்து மரண ஓலையொன்று வந்தது



சென்ற வாரத்தின் தொடர்ச்சியாக இப்பாடலடி தேவை கருததி இணைக்கப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் திருமணங்களில் பெரும்பாலானவை கோயில்களில் நடத்தப்பட்டு வரவேற்பு உபசரிப்புக்கள் மண்டபங்களிலேயே நடாத்தப்படுகின்றன. முன்பு வீடுகளில் நடந்த திருமணங்களில் மணமக்களை உறவினர்களும் மற்றையோரும் மனமார வாழ்த்துவார்கள். பழைய கமராக்களில் ஞாபகத்துக்கு ஓரிரு புகைப்படங்கள் எடுத்து வைப்பார்கள். திருமண வீடுகளில் சன நெருக்கடியும் இருக்காது. மகிழ்ச்சியோடு முகம் பார்த்து வழங்கிய உணவை உண்ட மனநிறைவோடும் வழி அனுப்புதலோடும் புறப்பட்டுச் செல்வார்கள். அது ஒரு சந்தோசமான உணர்வாகவும் இருக்கும்.

ஆலயங்களில் நடைபெறும் திருமணங்களில் ஐயருக்குப் பல சோலிகள் இருக்கும். வேக வேகமாகச் சுலோகங்களைச் சுருக்கிப் பலர் தட்சணைக்காகக் கிரியைகளைச் செய்து முடித்து விடுவர். இன்னும் சில ஐயர்மார் கிரியைக்குரிய பொருட்கள் யாவையும் பொறுப்பெடுத்து முன்னைய கிரியையில் பயன்படுத்திய பல பழைய பொருட்களைக் கொண்டு கிரியையை நடத்தி முடித்துவிடுவர். இன்னும் ஒரு சில ஐயர்மார் அன்றைய தினம் மூன்று நான்கு திருமணங்களை ஒழுங்கு செய்து ஏனோதானோ என அங்குமிங்கும் ஓடிக்கிரியைகளைச் செய்து முடிப்பர். திருமண உடுப்பு மாற்றி. தாலி கட்டி அக்சதை போட்டு அம்மி மிதித்து அருந்ததி பார்த்து சமர்பணம் தர்பணம் செய்து ஓம குண்டத்தை வலம் வந்த பின்னர் ஆசீர்வாதம் இடம் பெறும். புகைப்படம் எடுப்போர் வீடியோ படம் பிடிப்போர் முன்னிலையில் வரிசையில் சென்று அவசர அவசரமாக ஆசீர்வாதம் செய்வார்கள். இந்த அவசரம் மணமக்கள் மண்டபத்துக்குச் செல்வதற்கும் இலட்சம் செலவழித்து வாங்கிய உடுப்புக்களை மாற்றுவதற்கும் சில புகைப்படங்கள் வீடியோப் படங்கள் எடுப்பதற்குமானதாக இருக்கும்.

இவ்வாறு அவசர அவசரமாக செயற்பாடுகள் நடைபெறும் போது செய்யப்படும் வாழ்த்தும் ஆசீர்வாதம் அர்ப்பணிப்புடன் வழங்கப்பட்டதாக இருக்குமா?. ஒருபுறம் இந்நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் போது இன்னும் சிலர் அடுத்த கச்சேரிக்காக வேக வேகமாகக் கொண்டு வந்த பொருட்களை எடுத்துக் கொண்டு மண்டபத்தை நோக்கி விரைவார்கள். மண்டபம் அழைக்கப்பட்டவர்களால் களைகட்டிக் கிடக்கும். சுய சேவையில் உணவு பரிமாறுவதற்கான ஆரவாரங்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும். சமையல்காரரின் திட்டப்படி இரவெல்லாம் சமைத்த புறியாணி உணவினைக் கொண்டு வந்து இறக்கப்பட்டு விநியோகத்துக்குத் தயாராகும். ஒழுங்கமைப்பாளரின் கட்டளை வந்ததும் அடுத்த வரிசைக்கச் செல்வதற்காக லஞ்ச் சீட் சுற்றப்பட்ட பிளாத்திக்குத் தட்டை எடுத்துக் கொண்டு உணவு வரிசையில் காத்திருப்பார்கள். மறுபுறம் கமராக் காரர்கள் பேசியல் செய்வோரின் திட்டப்படி பெரும்பாலான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும். மணமக்களை வைத்துப் பல கோணங்களில் பல வகையில் சில படங்கள் எடுத்த பின்னரே மணமேடைக்குச் செல்ல அனுமதிப்பார்கள்.



**சோலையூர்க் குருபரன்**

அழைப்பின் பேரில் வருபவர்களுக்கு முகப்பில் வைத்து திருநீறு சந்தணம் குங்குமம் இட்டு175 மில்லிமென்பானப் போத்தலுடன் ரிச் கேக்கும் ஒன்றும் வழங்கப்படும். பல ஆயிரம் ரூபா செலவில் பல பொழுட்கள் சேர்த்து பலர் கைப்பட்டுப் பிசையப்பட்டு போரணையில் வைத்தெடுத்து அழகாகப் பொதி செய்யப்பட்டதே ரிச் கேக்காகும். நீரிழிவு நோயாளி இரத்த அழுத்த நோயாளி சிறுநீரக நோயாளி குடல் புண் உள்ளவர்கள் எல்லோருக்கும் ஒரே படையல் தான் இருக்கும். அதுதான் பலர் மல்லுக்கட்டிச் சமைத்த புறியாணிச் சாப்பாடு. அத்தோடு மென்பானம் ஐஸ் கிறீம் போற்ற வகையறாக்களும் வழங்கப்படும். சிலர் ஒன்றுக்கு மேலும் குடித்து உண்பர்.சிலரிடம் உங்களுக்குச் சில நோய்கள் இருக்கின்றனவே இதெல்லாம் பிரச்சினை ஆகாதா எனக் கேட்டால் இல்லை இல்லை இரண்டு குளிசையை மேலதிகமாகப் போட்டால் சரிவந்திடும் என்றும் கூறுவர். ஒருவாறு உணவை உண்டதும் கொண்டு வந்ததைக் கொடுத்து வாழ்த்துவதற்காக மண மேடைக்கு வரிசையில் செல்ல வேண்டும். மணமக்களை வாழ்த்தும் வரிசைக்குச் செல்ல வேண்டும். வரிசையில் நிற்பவர்கள் வந்து வாழ்த்துவதற்கு கமராக் காரர்களின் அனுமதி; கிடைத்ததும் வேகமாகச் சென்று கொண்டு வந்ததைக் கொடுத்து வாழ்த்திவிட்டு கமராக்களுக்கு முகம் காட்டுவார்கள். எல்லாமெ அவசர அவசரமாக நடந்தேறும். ஒருவாறு மணமக்களை வாழ்த்தி ஆசிர்வதித்து வீட்டுக்கும் சென்றுவிடுவர். இனிமேல்தான் பிரச்சினை இருக்கிறது. பிறயாணி உணவு உண்டவர்களில் பலர் படும் உடல் உபாதைவயிற்றுக்குள்ளே கறுபுறுப்புகள் சேர்ர்வுஅவஸ்தை ஆகியன ஏன் என்பது தொடரும்.

கல்யாண சமையல் சாதம்
கறிகளும் மிகப் பிரமாதம் -
அதை
உண்டபின் கடு முடுப்பு
உடல் உபாதையால்
வந்திடுமே சோர்வு.

**தொடரும்..**

# படுகோலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழுங்குங்கள்

## ஊடக அமைப்புக்கள் கோரிக்ககை.




படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்குமாறு கோரி மட்டக்களப்பு மாட்டத்தில் அமைந்துள்ள கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் சனிக்கிழமை(18.02.2023) மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டடிருந்தனர்.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புக்களின் ஒத்தழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உப்பினர் கோ.கருணாகரம், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணவான், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரெரெத்தினம், இ.பிரசன்னா, மற்றும் மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இதன்போது ஜனாதிபதிக்கு வழங்கி வைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடக்கு - கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களிற்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்படவேண்டுமென்பதில் நாம் சமரசம் செய்துகொள்ள தயாரா இல்லையென தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புக்கள், தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளது.

2000ம் ஆண்டில் பிபிசி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் அரங்கேறிய ஊடகப்படுகொலைகள் நீண்டே சென்றிருந்தது. தமிழர் தாயகப்பகுதிகளில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள்; கைது செய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை என்பது அனைவரும் அறிந்ததொரு உண்மையாகும்.

வடக்கு - கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண நாம் தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களிற்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென மீண்டும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை நல்லாட்சி காலத்தில் தாங்கள் பிரதமராக இருந்த காலப்பகுதியினில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களிற்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடு ஒன்றை வழங்க முன்வந்து விசாரணை குழுவொன்றையும் அமைத்திருந்தீர்கள்.

குழுவும் விசாரணைகளை முன்னெடுத்த போதும் ஆட்சி மாற்றத்தின் பின்னராக அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

பின்னராக கோத்தபாயராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக்குழுவே நியமிக்கப்பட்டிருக்கவில்லையென வாதிடப்பட்டிருந்தது.

எனினும் தற்போது தாங்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைகளின் பிரகாரம் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களிற்கான இடைக்கால நிவாரணத்தை வழங்குவதில் கவனத்தை செலுத்த கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு மாவட்ட எல்லைக்கிராம மக்கள் வாக்களிக்க தகுதியற்றவர்களா?



**(சில்மியா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைக்கிராமங்களில இன்னும் வாக்காளரது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப்படவில்லையெனவும் இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதென மட்டக்களப்பு மாவட்ட மார்ச்-12 இயக்கத்தின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று 20.02.2023 பிபகல் 2.30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட மாரச் -12 இயக்கத்தின் செயற்குழுவானது ஊரணி அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் ஒன்று கூடியது.

கூட்டத்தில் நாட்டில் நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் நிலைப்பாடுகள் ,மற்றும் சென்ற தேர்தலின் போது ஏற்பட்ட அனுபவங்கள் தொடர்பாகவும், நடைபெறவுள்ள தேர்தல் கண்காணிப்பு பணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் மட்டு மாவட்ட அரசதிபரை சந்தித்து கலந்துரையாடுவதெனவும் தீர்மானிக்கப் பட்டதாக அமைப்பின் முக்கியஸ்தகர் ஒருவர் தெரிவித்தார்.

# அனர்த்தத்தினால் துருக்கி, சிரியாவில் இறந்தவர்களுக்காக மன்னாரில் அஞ்சலி

**(வாஸ் கூஞ்ஞ)**

துருக்கி மற்றும் சிரியா நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தில் இறந்தவர்களுக்காக அஞ்சலி நிகழ்வு 'மெசிடோ' நிறுவனத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்றது.

திங்கள்கிழமை (20) காலை மன்னார் நகரில் பிரதான போக்குவரத்து நிலையத்துக்கு முன்பாக துருக்கி மற்றும் சிரியாவில் அன்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த மக்களுக்காக இவ்விடத்தில் சர்வமத தலைவர்கள் உட்பட பலதரப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுநிலையினரும் ஒன்றுகூடி பிராத்தனையில் ஈடுபட்டதுடன் யாவரும் சுடர் எற்றி மலர்கள் தூவி தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.

அத்துடன் சர்வமத தலைவர்களும் இவ்விடத்தில் அனுதாப உரைகள் நிகழ்த்தினர்.






# அவரவர் தாய்மொழிகளை விடுத்து
# வேற்று மொழியில் பயிலச் செல்கின்றனர்

உலக தாய் மொழிகள் தினமானது ஆண்டு தோறும் மாசி மாதம் 21ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. அவரவர் மொழிப் பண்பாட்டை கொண்டாடும் வகையிலும் அதேநேரம் மற்றவர் மொழிப்பண்பாடுகளை மதிக்கும் வகையிலும் உலக தாய்மொழிகள் தினம் கொண்டாடப்படுதல் வேண்டும் என்பதாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய மையவாதமும், காலனிய சிந்தனையும் மக்களை மையம் விளிம்பு என கூறுபடுத்தியிருப்பதன் விளைவு, உலக தாய் மொழிகள் தினமாக அன்றி, உலக தாய்மொழி தினம் என்ற பெயரில் பொதுவெளியில் சர்வ சாதாரணமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதன் மற்றொரு பெரும்போக்கு யாதெனில் அவரவர் தாய்மொழிகளை விடுத்து வேற்று மொழியில் பயிலச் செய்வதாக இருந்துவருகின்றது. வேற்று மொழி கல்வியறிவு அவசியமானதெனினும் அது தாய் மொழி கல்வியறிவு மறுப்பாக அமைந்து விடலாகாது.




குறிப்பாக தமது தேவையின் நிமித்தம் வெவ்வேறு மொழிகளை பயிலுதலில் எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் காட்டுகின்றார்களோ, அதேஅளவு மற்றவர் மொழிப்பண்பாடுகளை போற்றவும் மதிக்கவும், அவரவர் மொழி உரிமைகளை மதிக்கவும் பேணுவுமான மனித சமூகங்களின் உருவாக்கம் என்பதும் அவசியமாகின்றது.

அத்தகைய மனித சமூகங்களின் மொழிப்பயன்பாடு அல்லது மொழிப்பிரயோகம் என்பது எந்தவகையிலும் வன்முறையை தூண்டாத, மற்றவரை துன்பப்படுத்தாத, சங்கடங்களுக்கு உட்படுத்தாத மொழிப்பிரயோகமாக இருத்தலும் அவசியமாகின்றது.

சுருக்கமாகச் சொன்னால் சமத்துவமான, முற்போக்கான, எந்தவகையிலும் வன்முறைகளை வெளிப்படுத்தாத, மனித சமூகத்தை மாண்பு செய்கின்ற, மொழி பயன்பாடு என்பது அவசியமானது என்பதாகும்.

இந்தவகையில் சமத்துவமான வாழ்தலை நோக்கிய பயணத்தில் மூன்றாவதுகண் நண்பர்கள், இந்த வருடம் உலக தாய்மொழிகள் தினத்தினை செவிவழியேறல் மற்றும் நினைவாற்றலினுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் கொண்டாட இருக்கின்றனர்.

குறிப்பாக சிறந்த பெறுபேறுகள் என்றவகையில் பெறுபேறுகளை கொண்டாடுகின்ற கல்விமுறையில் பல்துறை ஆளுமை உருவாக்கம் என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன்,அத்தகைய ஆளுமை வெளிப்பாட்டிற்கான தளம் போட்டியை மையப்படுத்திய எழுத்துப்பரீட்சையில், மறுக்கப்பட்டுவிடுகின்றது.

இந்நிலையில் செவிவழியேறல் என்பது கேட்டலின் ஊடாக கிரகித்துக் கொள்ளல் என்பதற்கான வாய்ப்பாக இருக்கின்றது. குறிப்பாக எங்களுடைய பாரம்பரிய அரங்க வெளியில் செவிவழியேறல் கற்றல் முறையாக முக்கிய இடத்தை பெறுகின்றது. குறிப்பாக பாடமாக்கி ஒப்புவித்தலோடு சுருக்கப்பட்டுள்ள கல்வி முறையில் செவிவழியேறலாக நினைவில் இருத்திக் கொள்ளல் அல்லது செவிவழியேறலாக கிரகித்துக்கொள்ளல் என்பதற்கான வாய்ப்பும் ஏகபோகமாக மறுக்கப்பட்டு விடுகின்றது. அப்படியே கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டாலும் ஒலிப்பதிவாக்கி வைத்துக் கொள்ளல் என்பதே பெருவாரியான நடைமுறையாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. முற்றுமுழுதுமாக மனிதர் தங்கிவாழ்பவர்களாக மாற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் அவரவர் நினைவு கொண்டாட்டத்திற்குரியது என்பது தொழிநுட்ப சாதனங்களின் நினைவகங்களில் சேமித்து வைத்துக் கொள்ளல் அல்லது பதிவேற்றி வைத்துக் கொள்ளல் என்ற நடைமுறையின் பின்னராக மறக்கடிக்கப்பட்டிருக்கின்றது.

மிகச் சிறப்பாக தொழிநுட்ப சாதனங்களின் வருகையின் பின்னராக காலப்பகுதிகளில் படிப்படியாக மனித நினைவாற்றல் புறமொதுக்கப்பட்டு, எல்லாவற்றிற்கும் தொழிநுட்ப சாதனங்களில் தங்கியிருக்கும் மனிதர்களாக மனித சமுகம் மாற்றப்பட்டு விட்டது.




குறிப்புகளாக இருக்கட்டும், மிகச்சாதாரண விடயங்களாக இருக்கட்டும்,அன்றாட விடயங்களாக இருக்கட்டும் இவையெல்லாவற்றிற்கும்,இன்னபிறவற்றிற்கும் தொழிநுட்ப சாதனங்களில் தங்கி வாழ்கின்றவர்களாக மனிதர்கள் மாற்றப்பட்டு விட்டார்கள். மனிதர்களின் நினைவாற்றல் என்பது புறமொதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில். அவரவர் அறிவையும் திறனையும் கொண்டாடுவதும்,மனித நினைவில் வைத்திருத்தலின் அவசியத்தை வலியுறுத்துவதும் அவசியமாகின்றது.

பாடத்திட்டங்களுக்குள் மட்டுப்பட்டு பரீட்சைகளில் புள்ளிகளை பெறுதலை நோக்காகக் கொண்ட கல்வி முறையில் பாடமாக்கி ஒப்புவித்தல் போதுமானதாகவே இருந்து வருகின்றது.இவ்வாறு பாடமாக்கி ஒப்புவித்தலோடு சுருக்கப்பட்டுள்ளகல்விமுறையில்சமூக எதிர்வினையாற்றல் இல்லாதிருப்பதுடன், கல்வியின் மெய்யான அடைவும், மெய்யான அறிவுருவாக்கம் என்பதும் சாத்தியமற்றதாகவே இருந்துவருகின்றது.

மேலும் எந்த கேள்விகளுக்கும் இடம்கொடுக்காத அதேநேரம் பரீட்சைகளோடு மட்டுப்படுத்தபட்ட கேள்விகளில் சமூக உருவாக்கம் என்பதும் போட்டிமனபாங்கோடே கட்டமைக்கப்பட்டு விடுகின்றது.இத்தகைய போட்டிமனபாங்கோடு கூடிய சமூக அமைப்பில் தனிதனியனாகவே இயங்குவதற்கும் வாழ்வதற்கும் மனிதர்கள் பழக்கப்பட்டு விடுகின்றார்கள்.

இத்தகைய போட்டிதன்மையோடு கட்டமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்பில் சூழலை வாசித்தலுக்கான வாய்ப்பும் மறக்கப்பட்டு விடுகின்றது. இந்நிலையில் பாடத்திட்டம் கடந்த புற வாழ்க்கையை பெரும்பாலும் சமூக ஊடகங்களும், ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படுகின்ற அல்லது வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களே தகவமைத்து விடுகின்றன.

பெரும்பாலும் அவை மிகச்சாதாரணமாக வன்முறையான மொழிபிரயோகத்திற்கும் வழிவகை செய்கின்றன. இந்நிலையில் ஏன், எதற்கு என்ற கேள்விகளற்ற கல்வி நடைமுறையும் இத்தகைய வார்த்தை வன்முறையை சாதாரண புழக்கத்தில் மிகமிக இலாவகமாக பயன்படுத்தவும் வழிவகுத்து விடுகின்றன.

இதனுடைய தொடர்ச்சியாக போட்டி முறையில் அமைந்துள்ள கல்வி முறையில் சேர்ந்து கற்பதற்கோ அல்லது சேர்ந்து இயங்குவதற்கோ வாய்ப்புகள் இருப்பதில்லை மாறாக தனித்தனியனாக இயங்குவதற்கான சூழல்களே உருவாக்கப்பட்டு விடுகின்றன. இந்நிலையில் முன்பு சொன்னது போல கூத்தரங்கில் சிறுவர்கள் செவிவழியேறலாக கேட்டு பாடவும் சேர்ந்து கற்கவுமான வாய்ப்புகள் இருந்துவருகின்றன. எனினும் நவீன அறிவுப்பரப்பில் அத்தகைய ஆளுமைகளை உருவாக்குகின்ற ஆளுமையாளர்களை பாமரர்களாக கட்டமைக்கின்ற போக்கே இருந்து வருகின்றது. மறுபுறம் எங்களுடைய பாடத்திட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளவை எங்களுடைய அறிவையும் திறனையும் பொருளற்றதாக்கி விட்டிருக்கின்றது. சுருங்கச் சொன்னால் ஐரோப்பிய உலகம் தெரிந்த உள்ளூர் உலகங்கள் தெரியாதவர்களாக வடிவமைப்படுகின்றோம் என்பதுதான்.

இந்நிலையில் முற்போக்கான சமூக உருவாக்கம் குறித்து சிந்திக்கின்ற போது மிகச்சிறப்பாக சிறுவர்கள் கேட்டதை பேசும் பழக்கமுடையவர்களாக இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆக அத்தகைய சிறுவர்கள் மத்தியில் முற்போக்கான, ஆக்கப்பூர்வமான மற்றும் சமத்துவமான சிந்தனையை வளர்விக்கும் நோக்கில் அவர்களே கேட்டு பாடும் வகையிலான செயல்வாத பாடல்களும் அவர்களே கதைச் சொல்லும் வகையிலும் உலக தாய்மொழிகள் தினம் கொண்டாடப்படவிருக்கின்றது.

சுயாதீனமான சமூகங்களின் உருவாக்கத்திற்கும், சமத்துவமான வாழ்தலை நோக்கிய பயணத்திற்கும் அவரவர் அறிவும், படைப்பாக்கத்திறனும், விமர்சன நோக்கும் அடிப்படையாக அமைகின்றன என்றவகையில்,மனித நினைவாற்றலை பொருளுடையதாக்கி, சேர்ந்து கற்பதற்கான சூழலை மீளவும் உருவாக்கும் நோக்கில் உலக தாய்மொழிகள் தினம் கொண்டாடப்படவிருக்கின்றது.




**சி.ஜெயசங்கர்**
**இரா.சுலக்ஷனா**